1.8 பெண்ணியம் - சமுதாயத்தில் பெண்ணியம், இலக்கியத்தில் பெண்ணியம்- பல்வேறு கருத்துக்களும் பார்வைகளும்

## Contribution of Women Leaders for Social Reformation

Reformation refers to eradication of some evil social practices which are deep rooted in the society for countries. These practices are of great hindrance to the development of the country.

To achieve the above not only men but also women have contributed a lot. Among the women reformers some of them are worth mentioning.

## Dr. Muthulakshmi Reddy

Tamil Nadu was the forerunner in the transformation of society. In the great cultured heritage of Tamil Nadu there are some black spots often found and removed. One such a black spot was **'Devadasi System'.** One of the important leaders who fought vigorously against this system was Dr. Muthulakshmi Reddy.

Dr. Muthulakshmi Reddy was born on 30$^{th}$ July, 1886 in Pudukottai. She was the first woman in India to get a degree in medicine. In 1923 her sister died of cancer. On that day she took a vow to eradicate cancer. So she started Cancer Relief Hospital in 1949. The Cancer Institute at Adhar was started due to her good efforts. Our first Prime Minister Pandit Jawaharlal Nehru laid the foundation for that Institute.

She was not only interested in medicine but also in politics and social reforms. She dedicated herself to the cause of removing the cruel practice Devadasi system from Tamil Nadu.

She was personally praised by Gandhji for her active propaganda against Devadasi System.

Appreciating her role in the agitation against Devadasi System she was nominated to the Tamil Nadu Legislative Council in 1929. She was Vehemently supported in her efforts by Thiru V Kalyana Sundaranar and Periyar. As a result the Justice Party Government enacted a law abolishing Devadasi System.

## சமுதாய மாற்றத்தில் பெண்களின் பங்கு

சீர்திருத்தம் என்பது சமூகத்தில் பல நூற்றாண்டுகளாக வேரூன்றிக்கிடக்கும் சமுதாய கொடுமைகளை ஒழிப்பதாகும். இச்சீர்கேடுகள் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தடைக்கற்களாக அமைந்துள்ளன.

இந்த சமுதாய மாற்றங்களைக் கொண்டு வர, ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். அவர்களுள் சிலரது பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும்.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

சமுதாய மாற்றத்திற்கு முன்னோடியாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ் சமூகத்தில் கரும்புள்ளிகள் போல சில சீர்கேடுகள் காணப்பட்டு அவை நீக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று தேவதாசி முறையாகும். இந்த சமூக அவலத்தைப் போக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தீவிரமாக போராடிய பெண்மணிகளில் முக்கியமானவர்களில் ஒருவராவர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஜூலை 30, 1886 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் பிறந்தார். இந்தியாவின் முதல் பெண் மருத்துவராவார். 1923 ஆம் ஆண்டு இவரது தங்கை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தார். அதனால் புற்று நோயை அடியோடு ஒழிக்கவேண்டும் என்று சபதம் மேற்கொண்டார். எனவே 1949 ஆம் ஆண்டு புற்றுநோய் நிவாரண மருத்துவமனையை தொடங்கினார். இவரது சீரிய முயற்சியால் சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியப்பிரதமர் ஜவஹர்லால் நேரு இந்த மருத்துவமனைக்கான அடிக்கல்லை நாட்டினார்.

டாக்டர் முத்துலட்சுமி மருத்துவம் மட்டுமின்றி அரசியல் மற்றும் சமூக சிர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் காணப்பட்ட கொடிய பழக்கமான தேவதாசி முறையை ஒழிக்க தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

தேவதாசி முறை ஒழிப்பில் ஆர்வம் கொண்டிருந்ததால், மகாத்மா காந்தி இவரது சமூக பணிகளை வெகுவாக பாராட்டியுள்ளார் தேவதாசி முறை ஒழிப்பில் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக 1929 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். தந்தை பெரியார்,

In 1930, she organized All India Women Conference at Pune. She was the President of Indian Women Association from 1933 to 1947. She also started **Avvai Illam** an orphanage at Santhome in Madras (Now at Adyar). Dr.Muthulakshmi Reddy, through her dedicated and untiring work proved the world, hardwork never fails. She passed away in 1968 at the age of 82.

திரு.வி.கல்யாணசுந்தரம் போன்றவர்கள் இவரது கருத்தைத் தீவிரமாக ஆதரித்தனர். இதன் விளைவாக நீதிக்கட்சி அரசாங்கம் தேவதாசி ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்றியது.

1930 ஆம் ஆண்டு பூனாவில் அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டை நடத்தினார். 1933 முதல் 1947 வரை இடையில் இரு வருடங்கள் தவிர தொடர்ந்து இந்திய மாதர் சங்கத் தலைவியாக இருந்தார். ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு தரும் பொருட்டு அவ்வை இல்லம் என்ற அடைக்கல நிலையத்தை சாந்தோமில் தொடங்கினார். தற்சமயம் இவ்வில்லம் சென்னை அடையாறில் செயல்பட்டு வருகிறது. இலட்சிய வேட்கை கொண்ட எந்தப் பெண்ணுக்கும் தோல்வி இல்லை என்பதை வாழ்ந்து நிரூபித்த டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி 1968 ஆம் ஆண்டு தனது 82–வது வயதில் இந்த உலக வாழ்வைத் துறந்தார்.